## சாவகச்சேரி பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 24 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 30 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியும் தவிசாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சாவகச்சேரி பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வருங்காலங்களில் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக்கொள்கைகள் வெளிப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரித்தளிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ஐந்து வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | குழு அமைத்து பெறுமதி கணிப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 15 வகையான காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்பட்டிருக்காமையினால் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணி கட்டடங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (iii) | 05 சந்தைகளின் பெறுமதி ரூபா 8,830,000 நிதிக்கூற்றுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சந்தைகளினது பெறுமதிகள் இனிவரும் காலங்களில் சேர்க்கப்படும். | சந்தைகளின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். | சட்டத்திற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை சமர்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| | பிரிவு 158 (1) | ஆதனவரி நிலுவை ரூபா 2,545,710 செலுத்தத் தவறியோருக்கு பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் பற்றாணைச்சீட்டு வழங்கப்படும். | பிரதேச சபை சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 | பணியாளர்களிற்கு ஓராண்டுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கப்பட்டமையினை உறுதிப்படுத்தப்பட முடியாதுள்ளது. | பயிற்சி வழங்குதற்கு நடவடிக்கை தொடரப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைக்கமைய பணியாளர்களிற்கு பயிற்சி வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஏனைய சுற்றறிக்கை 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்ளூராட்சி - 01 ஆம் இலக்க உள்@ராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | கௌரவ ஆளுநரின் அனுமதியை பெற்று சேவைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எமது பிரதேசசபைக்குரிய விற்பனை வரி 1% இனை சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பிரதேச சபை அதிகாரச் சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,168,509 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,663,917 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,568,317 | 161,994 | 3,313,013 | 106,000 | 24,731 | 484,156 |
| வாடகைகள் | 16,563,200 | 15,249,649 | 103,454 | 13,679,907 | 14,903,808 | 113,004 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,476,100 | 3,428,164 | 5,850 | 739,050 | 1,950,111 | 5,850 |
| ஏனைய வருமானம் | 74,190,648 | 78,437,100 | - | 74,467,943 | 71,580,662 | - |
| | 94,798,265 | 97,276,907 | 3,422,317 | 88,992,900 | 88,459,312 | 603,010 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி நிலுவை ரூபா 2,545,710 இனை அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவை அறவிடப்பட்டு வருகின்றது. | வீதவரி நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஏக்கர் வரி நிலுவை ரூபா 57,086 இனை அறவிட நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்பான ஆவணங்கள் யுத்தகாலப்பகுதியில் அழிவடைந்துவிட்டமையால் பதிவழிக்கமுடியவில்லை. | ஏக்கர் வரி நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,905,950 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தது. | நீதிமன்ற தண்டப்பணம் இதுவரை மாகாண திறைசேரிக்கு கிடைக்கப்பெறவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும 25 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 25 விடயங்களுக்குமான உப விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. | சட்டத்திற்கமைய உரிய உபவிதிகள் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 25 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படும். | உபவிதிக்கமைய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் உருவாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மீளாய்வாண்டில் ரூபா 160,389 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் வருமானங்கள் எவையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையில் ஒரு ரக்டர் லோட் குப்பைக்கு ரூபா 2000 வீதம் அறவிடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அனுமதி பெறப்படாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்த 08 தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கான வியாபார உரிமக்கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இராணுவ முகாம்களுக்குள் உள்ளதாலும், காணி உரிமையாளர்களுடன் வழக்கு நடைபெற்றுவருவதனாலும் அனுமதி பெறுவதில் சிரமம் காணப்படுகின்றது. | வியாபார உரிமக்கட்டணங்களை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இரண்டு முற்பணங்கள் ரூபா 1,381,550 தீர்வு செய்யப்படாது ஒரு வருடத்திற்கு மேலாக சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முற்பணங்களை தீர்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஆதனங்களுக்கு மீள்மதிப்பீடு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இறுதிப்பட்டியல் உரிய திணைக்களத்திடம் இருந்து இன்னமும் கிடைக்கப் பெறவில்லை. | ஆதனங்களுக்குரிய மீள்மதிப்பீட்டிற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 16 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | அட்டவணைப்படுத்தப்படாத பதவியினரின் நிரந்தர நியமனத்திற்காக முகாமைத்துவ சேவைத்திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 2,725 உரிமையாளர்களுக்கு K விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதன படிவம் | K படிவம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்திற்கமைய K படிவம் விநியோகிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வியாபார அனுமதியின்றி பொதுமண்டபம் நடாத்தியமை தொடர்பாக வழக்கு இடம்பெற்று வருவகின்ற போதிலும் இதற்கான எதிர்பாக்கப்படும் பொறுப்புக்கள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்பாக இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | வழக்கு தொடர்பான எதிர்பாக்கப்படும் பொறுப்புக்கள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளி காட்டப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5.2 விளைவற்ற சொத்து

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வாகனங்கள் 3 தொடக்கம் 10 வருடங்கள் ஆக பயன்படுத்தப்படாதிருந்தது. | ஏல விற்பனை செய்வதற்கும் திருத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடுகள் காணப்படுவது பாதீட்டின் குறைபாடாக உள்ளது. | பழுதுபார்த்தல் செலவு குறைவாக காணப்பட்டமையாலும் குறைந்தளவான ஆணைச்சீட்டினை பயன்படுத்தியமையாலும் பாதீட்டு செலவீனங்களிற்கும் உண்மைச் செலவீனங்களிற்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடல் வேண்டும். |